# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 2018-2019 - ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. முன்னுரை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை தனித் துறையாக 1976-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இத்துறை அரசின் திறன்மிகு மனிதவள மேலாண்மையில் முக்கிய பங்காற்றுகிறது. மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத் தேவைகளான பணியாளர் தேர்வு, பயிற்சி, ஊக்குவித்தல், பதவி உயர்வு மற்றும் அரசு ஊழியர்களின் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவற்றினை இத்துறை நிருவகிக்கிறது. இவற்றுடன், தலைமைச் செயலகத்தின் பணிகளை வடிவமைப்பதிலும் அரசு ஊழியர்களின் நலன் பேணுவதிலும் இத்துறை முக்கிய பங்காற்றுகிறது.

2. இத்துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை என இரண்டு அலகுகளாக பின்வரும் பணிகளை செயல்படுத்துகிறது :-

அ. <u>அறிவுரை வழங்கும் பணி</u>

இத்துறை, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் இனங்களில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது:

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு மற்றும் அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.

ii. அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்புதல் குறித்தான சிறப்பு விதிகள் / தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, - ஆகியவற்றின்படி அறிவுரை வழங்குதல்.

iii. அடிப்படை விதிகள் குறித்த தெளிவுரைகள் வழங்குதல்.

iv. பணி முதுநிலையை மாற்றியமைத்தல் குறித்த கருத்துருக்களை விதிக்கூறுகளின் படி ஆய்வு செய்தல்.

ஆ. <u>சட்டரீதியான பணி</u>

1. பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை மாநில அரசுப் பணியாளர்களின் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக) பணி தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிருவகித்தல் :

   i. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண். 14/2016]

   ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

   iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

   iv. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.

   v. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

vi. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்.

vii. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்.

viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள் - இனம் XXII.

2. தலைமைச் செயலகம் தொடர்பான விதிகள்:

i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்.

ii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்பு விதிகள் – வகுப்பு XII மற்றும் XII-A.

iii. தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

3. அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்:

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.

ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.

iii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012.

iv. தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய பணிவிதிகள், 2017.

4. அரசின் அலுவல் தொடர்பான விதிகள்

i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்; மற்றும்

ii. மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

இ. <u>நிருவாகப் பணி</u>

i. தலைமைச் செயலகத்தில் "ஓர் அலகு முறை" யின் (One Unit System) கீழ்வரும் அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.

ii. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அரசுப் பணியாளர்களின் குறைகளை பரிசீலித்தல்.

iii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மாநில தகவல் ஆணையம் ஆகியவற்றின் பணியமைப்பு தொடர்பான நிருவாகப் பணிகள்.

ஈ. <u>இதரப் பணிகள்</u>

1 பயிற்சியளித்தல்,

i. இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், துணை வட்டாட்சியர்கள் ஆகியோருக்கு பவானிசாகரிலுள்ள குடிமைப் பணிகள் பயிற்சி நிலையத்திலும் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆய்வு) துறை மூலமாக அனைத்து மாவட்ட தலைமையகங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகளும் நடத்துதல்.

ii. பல்வேறு நிலையிலுள்ள அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளித்தல்.

iii. புதிதாக நியமனம் செய்யப்பட்ட தலைமைச் செயலக பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல்.

2. பின்வரும் அமைப்புகளில் பணியமைப்பு குறித்த பணிகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருதல் :

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ii. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்.

iii. மாநில விழிப்புப் பணி ஆணையம்

iv. பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

3. அரசுப் பணியாளர் நலன்

அரசுப் பணியாளர்களின் நலன் என்பது அரசிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவர்களது நியாயமான குறைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்த நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு, உடனுக்குடன் தீர்வுகாணப்படுகின்றன. உரிய காலத்தில் பதவியுயர்வுகள் வழங்கப்படுவதையும், பணிப்பயன்கள் விரைவாக அளிக்கப்படுவதையும், ஒழுங்கு நடவடிக்கைகள் விரைந்து தீர்வு செய்யப்படுவதையும் உறுதி செய்வதற்கு தேவையான வழிமுறைகள் இத்துறையால் வகுக்கப்பட்டுள்ளன.

4. மின் ஆளுகை

தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் வாயிலாக அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிமையாகவும் திறமையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அளிக்கப்படுதல் மின் ஆளுகை ஆகும். தலைமைச் செயலகத் துறைகளால் நிருவகிக்கப்படும் பல்வேறு சட்டங்களும்

விதிகளும் மின் தகவல் தொகுப்பாக மாற்றப்பட்டு அரசு இணைய தளமான www.tn.gov.in-ல் வழங்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலக குறும்பரப்பு தளத்தில், இத்துறையால் வெளியிடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகள் மின்னணு தொகுப்பாக (Electronic Compendium) வழங்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அனைத்து துறைகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி தொடர்பான விவரங்கள், பணியாளர் தகவல் முறைமையில் (Personnel Information System- PINFOSYS) பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளின்படி நிருவகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பணியாளர்களைத் தேர்வு செய்யும் முதன்மை முகமையாக பணிபுரிகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ல் குறிப்பிட்டுள்ளவாறு தேர்வாணையத்தின் மற்ற பணிகள் பின்வருமாறு:-

i. பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளில் மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

ii. அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துதல்.

iii. மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் சார்பாக டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை நடத்துதல்.

தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்-தன்மையினை உறுதி செய்திடவும், பணிநியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு புதிய சீர்திருத்தங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:-

i. விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு தங்களை முன்னதாக தயார் செய்து கொள்ள ஏதுவாக, ஒவ்வோர் ஆண்டும் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடும் முறை ;

ii. அனைத்துத் தேர்வுகளுக்கும், பயன்பாட்டிற்கு எளிதாக உள்ளவாறு இணையதளம் வழியே விண்ணப்பிக்கும் முறை ;

iii. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் கையொப்பம் மற்றும் புகைப்படத்துடன் நிரந்தரமாக பதிவு செய்யும் வகையில் "ஒருமுறை பதிவு வசதி"யினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி விண்ணப்பதாரர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய நிரந்தரத் தரவுதளம் பராமரிக்கப்படுகிறது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம் ;

iv. அனைத்துத் தேர்வு மையங்களும் வலை நிழற்படக்கருவி (Web Camera) மற்றும் ஒளிப்பதிவு மூலம் கண்காணிப்பு செய்யப்படுகின்றன ;

v. அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படின், உதவியாளர்களும் வழங்கப்படுகின்றனர்;

vi. தேர்வு முடிவடைந்த பின்னர் கொள்குறி வகையைச் (Objective type) சார்ந்த தேர்வுகளுக்கான விடைகள் உடனடியாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. தேர்வாளர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது;

vii. விரிவான விடையளித்தல் வகை விடைத்தாளினை தேர்வாணைய அலுவலகத்தில்பார்வையிட தேர்வாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது;

viii. காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்பட்டு வருகிறது;

ix. துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களுக்கு ஒற்றைச் சாளர முறை பின்பற்றப்பட்டு வருகிறது ;

x. 23.04.2018 முதல் சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், தங்களது மூலச் சான்றிதழ்களைத் தேர்வாணைய இணையதளத்தில் அரசு இ-சேவை மையம் மூலமாக பதிவேற்றம் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

<u>சாதனைகள்</u>

தேர்வாணையம் கடந்த இரண்டாண்டுகளில் (29.05.2018 வரை) இளநிலை உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர், உதவி புள்ளியில்

ஆய்வாளர், உதவி சிறை அலுவலர் மற்றும் நேர்முகத் தேர்வு இல்லாத ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு 12,018 தேர்வர்களை தெரிவு செய்துள்ளது.

## 3. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்

2005-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பொது அதிகார அமைப்புகளின் கட்டாளுகையில் உள்ள தகவலை குடிமக்கள் பெறுவதையும் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றை மேம்படுத்துவதையும், மற்றும் ஊழலைத் தடுத்து நிறுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

அரசியலமைப்பினாலோ அல்லது அதன் கீழ் நாடாளுமன்றத்தினால் அல்லது மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தினாலோ அல்லது அரசினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை

அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையினாலோ, நிறுவப்பட்ட அல்லது அமைத்து உருவாக்கப்பட்ட எந்தவோர் அதிகார அமைப்பும் அல்லது குழுமமும் அல்லது தன்னாட்சி நிறுவனமும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிற்குள் வரும். அரசினால் சொந்தமாகக் கொண்டிருக்கக்கூடிய, கட்டாளுகை செய்யப்படுகின்ற அல்லது பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படுகிற எந்தவொரு குழுமம் அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெருமளவில் நிதியுதவியளிக்கப்படும் அரசுசாரா அமைப்புகளும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிற்குள் வரும்.

எந்த ஒரு பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டாளுகையின் கீழ் உள்ள தகவல் எவ்வடிவில் இருந்தாலும் அவற்றை தாளிலோ அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ அல்லது மாதிரிகளாக வைத்திருக்கப்படுவதை பெற எந்தவொரு குடிமகனும் உரிமையுடையவராவார். மேலும்,

அக்குடிமகன் பணிகளையோ, ஆவணங்களையோ அல்லது பதிவுருக்களையோ பார்வையிடவும் செய்யலாம்.

தகவல் பெறுவதை எளிதாக்கும் வகையில் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் பதிவுருக்கள் அனைத்தையும் உரிய வகையில் வரிசைப்படி தொகுத்து பட்டியலிட்டு பேணி வருவது இச்சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் அமைப்பு, செயற்பணிகள், கடமைகள் மற்றும் இதர விவரங்களையும் தாமாகவே முன்வந்து வெளியிடுதல் வேண்டும்.

பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் ஒவ்வோர் அலுவலகத்திலும் அல்லது அதன் ஒவ்வோர் அலகிலும் பொது தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோரை நியமனம் செய்கின்றது. எந்த ஒரு குடிமகனும் தகவல் கோரி சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலருக்கு விண்ணப்பித்தால் அப்பொதுத் தகவல் அலுவலரால் 30 நாட்களுக்குள் பதில் அனுப்பி

வைக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, தகவலினை வெளியிடுவதிலிருந்து குறிப்பாக விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர்த்து, பிற இனங்கள் அனைத்திலும் குடிமக்கள் தகவல் பெறலாம்.

பதில் வழங்கப்படவில்லை என்றாலோ அல்லது வழங்கப்பட்ட பதிலில் திருப்தியில்லை என்றாலோ சம்மந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரிடம் விண்ணப்பதாரர் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம். முதல் மேல்முறையீட்டிற்கான பதிலிலும் மேல்முறையீட்டாளர் திருப்தி அடையாவிட்டால் மேல்முறையீட்டினை இச்சட்டத்தின்படி இரண்டாவது மேல்முறையீட்டு அமைப்பான மாநில தகவல் ஆணையத்தின் முன் தாக்கல் செய்யலாம்.

ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடுகள் செய்யப்படும்போது, மேல்முறையீட்டாளர்களால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள், மற்றும்

அவ்வாறு செய்யப்பட்ட மேல்முறையீடுகளுக்கு தீர்வு காண்பது குறித்த நடைமுறைகள் ஆகியன தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012 -ல் அடங்கியுள்ளன.

இரண்டாவது மேல்முறையீட்டு அமைப்பான மாநில தகவல் ஆணையம், ஒரு மாநில தலைமைத் தகவல் ஆணையரையும், ஆறு மாநில தகவல் ஆணையர்களையும் கொண்டு செயல்படுகிறது. மாநில தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, மாநில தலைமைத் தகவல் ஆணையரிடம் உற்றமைந்திருக்கும்.

இரண்டாவது மேல்முறையீடு அல்லது புகார் ஒன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, வழக்கு விசாரணைகள் பொதுவாக ஆணையத்தின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் மேல்முறையீட்டாளர்களின் வசதிக்காக ஆணையம் வழக்கு விசாரணையை மாவட்ட தலைமையிடங்களிலும் நடத்துகின்றது. வழக்கு

விசாரணைகள் மேற்கொள்ள காணொலிக் காட்சி வசதியும் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீடுகள் பெறப்பட்டு அவை பதிவு செய்யப்பட்ட தகவல் குறுந்தகவல் சேவை (SMS) மூலம் அனுப்பப்படுகிறது.

இவ்வாணையத்திற்கு செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடுகள் / புகார்கள் குறித்த வழக்குப் பட்டியல்கள் மற்றும் ஆணையத்தின் முடிவுகள் குறித்த விவரங்கள் ஆணையத்தின் இணையதளத்தில் (www.tnsic.org) இடம் பெற்றுள்ளன.

காது கேட்கும் திறன் குறைபாடு மற்றும் பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கு, அவர்களது விண்ணப்பத்தின் பேரில், விசாரணையின் போது உதவியாளர் வசதி, ஆணையத்தால் அனுமதிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளி மேல்முறையீட்டாளர்கள் விசாரணை கூடத்தை எளிதாக அடையும் பொருட்டு சக்கர நாற்காலிகள் ஆணைய

வளாகத்தில் உள்ளன. நாட்டிலேயே முதன்முதலாக பார்வைக் குறைபாடு உடையவர்களிடமிருந்து குறிப்பான கோரிக்கை பெறப்பட்டால் ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகளை, பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி அச்சு எழுத்து முறையில் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநில தகவல் ஆணையத்தினால் தகவல் பெறும் உரிமை பற்றிய பட்டறை ஒன்று சென்னையில் உள்ள காவலர் பயிற்சி கல்லூரியில் 28.10.2017 அன்று நடத்தப்பட்டது. அரசின் 38 துறைகளிலிருந்து பொதுத் தகவல் அலுவலர்களும், மேல்முறையீட்டு அலுவலர்களும் மேற்படி பட்டறையில் கலந்து கொண்டனர்.

மாநில தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை மாநில சட்டசபையில் வைக்கப்படுகிறது.

## 4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

மாநில விழிப்புப் பணி ஆணையம் 1965-ல் அமைக்கப்பட்டது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது.

பொதுப்பணிகளில், பெரும் நிருவாகப் பிரச்சினையான ஊழலை தடுப்பதில் விழிப்புப் பணி ஆணையம் முக்கிய பங்காற்றுகிறது. ஊழல் தொடர்பாக வெளிக் கொணரப்பட்ட தனிப்பட்ட வழக்குகளை கையாளும் நடைமுறை குறித்தும் ஆணையம் ஆலோசனை வழங்குகிறது.

மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் செயலதிகாரங்களாவன;

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டார் அல்லது ஊழல் புரிந்துள்ளார் என

சாட்டுரைக்கப்படுகின்றபோதோ அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளார் என்கின்றபோதோ அந் நிகழ்வு குறித்து விசாரணை மேற்கொள்ளுதல் ;

(ii) பொது ஊழியர் ஒருவர் தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளுதல் ;

(iii) தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்தல்; மற்றும்

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின் மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது:-

- தமிழ்நாடு அரசின் அனைத்து பொது / அரசு ஊழியர்கள் ;
- மாநில அரசின் அனைத்து சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் ;
- பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது ஊழியர்கள் :

விழிப்புப் பணி ஆணையம் தனது செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கின்றது. இவ்வாண்டறிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு, சட்டப்பேரவை முன் வைக்கப்படுகிறது.

**ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம்**

மாநில அரசிலும், நகராட்சி நிர்வாக அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள்

மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால், சுமத்தப்படும் சாட்டுரைகளை விசாரணை செய்ய ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டன.

1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகளின்படி இத்தீர்ப்பாயங்கள், தேவைப்படும் சாட்சியங்களுக்கு அழைப்பாணை அனுப்பவும் தொடர்புடைய ஆவணங்களைக் கோரவும் அதிகாரம் பெற்ற ஒரு நீதிமுறை சார்புடைய அமைப்புகளாகும்.

தற்போது, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் பதவி நிலையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாய ஆணையரின் தலைமையில்

இத்தீர்ப்பாயங்கள் செயல்படுகின்றன. இத்தீர்ப்பாய ஆணையருக்கு வழக்கு விசாரணையில் ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) உதவி புரிகின்றனர். 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம்) விதிகளின்படி வழக்கின் மீதான தீர்ப்பாயத்தின் விசாரணை அறிக்கையினை, ஆணையர்கள், உரிய மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு, தொடர்புடைய நிர்வாகத்துறைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

## 5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் முக்கிய செயல்பாடுகள் ;

- ஊழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தவறானநடத்தை குறித்து மாநில விழிப்புப்பணி ஆணையத்தால் அனுப்பிவைக்கப்படும் சாட்டுரைகளின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

- இயக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல் மற்றும், புள்ளி விவரங்களை மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு தெரியப்படுத்துதல்.
- பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் பொது ஊழியர்களின் மீதான ஊழல் தொடர்பான புகார்களின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.
- கையூட்டு மற்றும் ஊழல் முறைகேடுகளைக் கண்டறிவதற்காக நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, 1988-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்.

ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஓர் அலுவலகத்தைச் சார்ந்த அலுவலர் மீதான ஊழல் புகார்கள் குறித்து அத்துறையில் உள்ள விழிப்புப்பணி அலுவலர்கள் விசாரணை மேற்கொள்கின்றனர். மேலும், உரிய கால இடைவெளியில், துறையை சேர்ந்த விழிப்புப்பணி அலுவலர்கள் அந்நிறுவனத்தின் கூர்உணர்வுமிக்க பகுதிகளிலும் இடங்களிலும், திடீர் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

"லஞ்சம் கொடுப்பதும், வாங்குவதும் குற்றம்" என்ற தகவலையும், ஊழல் குறித்த புகார்களை, இயக்ககத்தின் சென்னை அலுவலகத்தில் அல்லது உள்ளூர் அலுவலகங்களில் அளிக்கலாம் என்ற தகவலையும், தமது அலுவலகத்தின் தகவல் பலகையில் அனைவரின் பார்வையில் படுமாறு வைத்திடவும், அவர்களது அலுவலக இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அரசு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

பொது வாழ்வில் தூய்மை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆண்டு தோறும் நடைபெறும் வர்த்தகப் பொருட்காட்சியில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஒரு காட்சி அரங்கு அமைக்கிறது.

## 6. ஆய்வுப் பிரிவு

அரசு அலுவலகங்களில், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், திறனை அதிகரிக்கவும், தாமதங்களைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றை காலமுறையில் முழுமையாக ஆய்வு செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

வருடாந்திர ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி, அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள ஆய்வு அலுவலர்களால் ஆய்வு நடத்தப்படுகிறது.

ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு, அதன்மீது குறை நீக்கு அறிக்கை அளிப்பதற்காக தொடர்புடைய தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவரால் அளிக்கப்படும் பொதுக்குறிப்பு, தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சம்மந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆய்வுப் பிரிவு, மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து (i) இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு 2 நாட்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை குறித்த முன்னோடிப் பயிற்சியினையும், (ii) கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர்களுக்கு 3 நாட்களுக்கு அலுவலக நடைமுறை குறித்த குறுகிய காலப் பயிற்சியினையும் நடத்தி வருகிறது. இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில்

நடத்தப்படுகின்றன. 2017-2018-ஆம் ஆண்டில், 31 முன்னோடிப் பயிற்சிகளும் 31 குறுகிய காலப் பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

மாவட்ட ஆய்வுக்குழுக்கள், துணை ஆட்சியர் நிலையில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் தலைமையில், வட்டாட்சியர் நிலையில் உள்ள துணை ஆய்வுக்குழு அலுவலர்களின் உதவியுடன், மாவட்ட அளவிலான அலுவலகங்களில், ஆண்டாய்வுகள் மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கும் உதவியாக இருக்கின்றன. 2017-2018-ஆம் ஆண்டில், 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 124 ஆண்டாய்வுகள் மற்றும் 2763 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் 123 கண்காணிப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

## 7. பயிற்சி

### I. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின் கீழ் இயங்குகின்றது.

- இப்பயிற்சி நிலையத்தில் நேரடி நியமனம் மூலம் தலைமைச் செயலகத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் தட்டச்சர்களுக்கு 64 பணிநாட்களுக்கு 1½ மணிநேர காலஅளவில், பொது நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில், தேர்ச்சிபெறவேண்டும் என்பது அவர்கள் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்வதற்கும், பதவி உயர்வுக்கான பட்டியலில் பெயர்

சேர்ப்பதற்கும் அடிப்படையான தகுதியாக உள்ளது. இதுவரை, இப்பயிற்சி நிலையத்தில் மே மாதம் 2018 வரை 95 அணிகளுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம், தற்போது தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்களுக்கான 10 நாட்கள் கொண்ட பணியிடை பயிற்சியை அவர்களது பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு அளித்து வருகின்றது. இப்பணியிடை பயிற்சியானது, அரசு அலுவலர் நன்னடத்தை விதிகள், அடிப்படை விதிகள், பணி நிபந்தனைகள் சட்டம், 2016, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) மற்றும் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள், தலைமைப் பண்பு மற்றும் பாலின பரிவுள்ள ஆளுகை போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளை உள்ளடக்கி வழங்கப்படுகின்றது. மொத்தம் 23 அணிகளில் பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டு,

2018 மே மாதம் வரை அணிக்கு 35 பிரிவு அலுவலர்களைக் கொண்ட 13 அணிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது பணியில் இருக்கும் பணித்திறன் வாய்ந்த பிரிவு அலுவலர்கள், சார்புச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் ஆகிய நிலைகளில் உள்ள அலுவலர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன என்பது இப்பயிற்சியின் சிறப்பம்சமாகும்.

## II. பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர், அலுவல் வழி பயிற்சித் துறைத் தலைவர் ஆவார். அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், அகில இந்தியக் குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம், 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் ஆகியவை பயிற்சித் துறைத் தலைவரின் நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் மேற்கண்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற வரும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கத் தேவையான கற்கும் மற்றும் கற்பித்தல் கருவிகளை மேற்கண்ட பயிற்சி நிலையங்களுக்கு அளிக்க அரசு ரூ.25.70 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

நல்ஆளுமை விருதிற்கான விண்ணப்பங்களைப் பெற்று அவற்றை பரிசீலனை செய்து, தகுதியான விண்ணப்பங்களை ஆய்வு குழுவிற்கும் தேர்வுக் குழுவிற்கும் அனுப்புவதில் பயிற்சித் துறைத் தலைவர் முக்கிய பங்காற்றுகிறார்.

## III அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்



பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழக அரசின் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் நீதித்துறை அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சி மையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நவீன வகுப்பறைகள், குளிரூட்டப்பட்ட நூலகம், உள்விளையாட்டு அரங்கம், குளிரூட்டப்பட்ட கலையரங்கம் மற்றும் காணொலிக் காட்சியரங்கம், விடுதி வசதிகள், வளாகம் முழுவதும் இணையதள வை-பை வசதி, நவீன சமையல்கூடம், அலுவலர் குடியிருப்புகள், விருந்தினர் மாளிகை, குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், சூரிய சக்தி நீர் சூடேற்றும் கருவிகள், சூரிய சக்தி விளக்குகள் உள்ளிட்ட வசதிகளை இந்த நிலையத்தில் ஏற்படுத்துவதற்காக அரசு ரூ.38.43 கோடியினை 2012-ஆம் ஆண்டு வழங்கியது. இவ்வாறான நவீனமயமாக்கலைத் தொடர்ந்து பயிற்சி நிலையத்தின் பயிற்சி அளிக்கும் திறன், அணி ஒன்றுக்கு 250 லிருந்து 685 ஆக உயர்ந்துள்ளது.





## IV. ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

‘அ’ மற்றும் ‘ஆ’ தொகுதி அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது, பாடதிட்ட அலகு ‘அ’ மற்றும் ‘ஆ’ ன்படி பல்வேறு துறைகளில் நேரடியாகவும்,

பதவி உயர்வின் மூலமாகவும் நியமனம் செய்யப்பட்ட ‘அ’ மற்றும் ‘ஆ’ தொகுதி அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி இந்நிலையத்தால் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பது மற்றும் பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவது, பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யத் தேவைப்படும் தகுதியாகும்.

2017-2018 ஆம் ஆண்டில், 303 அலுவலர்களுக்கு 10 அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## V. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை

மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணிகள் முதனிலை தேர்வுக்கு 325 மாணவர்களுக்கு (225 - தங்குமிட வசதியுடன்; 100 - பகுதி நேரம்) அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் பிரத்யேகமான பயிற்சி வழங்கி வருகிறது. 2017-ஆம் ஆண்டு முதல் மீனவ சமுதாயத்தைச்

சார்ந்த 20 மாணவர்கள் கூடுதலாக இப்பயிற்சி மையத்தில் முதனிலை தேர்வு பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சி மையம் முன்னணி நாளிதழ்களில் விளம்பரப்படுத்தி விண்ணப்பங்களை இணையதளம் வழியாக பெற்று, மாநிலம் முழுவதும் உள்ள 24 தேர்வு மையங்களில் நுழைவுத் தேர்வு நடத்தி, இட ஒதுக்கீடு முறையை பின்பற்றி மாணவர்களைச் சேர்க்கிறது.

இம்மையத்திலுள்ள இருக்கைகளின் இனவாரியான இடஒதுக்கீட்டு அட்டவணை பின்வருமாறு;

| **இனம்** | **முழு நேரம்** | **பகுதி நேரம்** |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 92 | 41 |
| அருந்ததியர் | 18 | 08 |
| பழங்குடியினர் | 03 | 01 |
| மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 40 | 18 |

| | | |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | 54 | 24 |
| பிற்படுத்தப்பட்ட –(முஸ்லீம்) | 07 | 03 |
| மாற்றுத் திறனாளிகள் | 07 | 03 |
| இதர வகுப்பினர் | 04 | 02 |
| **மொத்தம்** | **225** | **100** |
| **மீனவர் சமுதாயத்தினர் மட்டும்** | 20 | - |
| **மொத்தம்** | **245** | **100** |

முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி:

முதல் நிலை தேர்வில் வெற்றிபெற்ற 225 மாணவர்கள், தங்கும் இடவசதியுடன் கூடிய முதன்மை தேர்வுப் பயிற்சிக்காக இப்பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்படுகின்றனர். முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு புத்தகங்கள் / கையேடுகள் வாங்கும் பொருட்டு வருமான உச்ச வரம்பின்றி மாதம் ஒன்றுக்கு ரூ.3000/- வீதம் மூன்று மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஆளுமைத் தேர்வுக்கான பயிற்சி:

முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணியில் இருக்கும் மற்றும் ஓய்வு பெற்ற மூத்த குடிமைப் பணி அதிகாரிகள் மற்றும் பாட வல்லுநர்களைக் கொண்டு மாதிரி ஆளுமைத் தேர்வுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

புதுடில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 10 நாட்கள் சலுகைக் கட்டணத்தில் தங்கி தேர்வில் கலந்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. இத்துடன், புதுடில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ள செல்லும் 100 மாணவர்களுக்கு இடைநிகழ்வுச் செலவிற்காக ரூ.2000/- வழங்கப்படுகிறது.

இம்மையத்தில் பயிற்சி பெற்ற 34 மாணவர்கள், மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் 2017-ம் ஆண்டிற்கான குடிமைப்பணிகள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள்.



245 மாணவர்களுக்கு உணவுடன் கூடிய தங்கும் வசதி போதுமான அளவில் இம்மையத்தில் உள்ளது.

மேலும், இம்மையத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பொலிவுறு வகுப்பறைகள், 25,000 புத்தகங்களுக்கு மேல் கொண்ட நூலகம், கலையரங்கம், கணினி அறை, செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி வசதியுடனான படிக்கும் அறை மற்றும் வளாகம் முழுவதும் மாணவர்கள் பயன்படும் வகையில் இலவச வை-பை வசதி ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான பயிற்சி**

இந்த மையம் ஏழு மாற்றுத்திறனாளிகளுக்கு முழுநேரப் பயிற்சியும், மூன்று மாற்றுத்-திறனாளிகளுக்கு பகுதி நேரப் பயிற்சியும் வழங்கி வருகிறது. மேலும் இம்மையத்தில் சாய்தளப்பாதை, மாற்றுத் திறனாளி கழிவறைகள், பிரெய்லி வரைபடங்கள், சக்கர நாற்காலிகள் உள்ளிட்ட வசதிகள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**குடிமைப்பணிகள் பயிற்சி மையம் - மதுரை மற்றும் கோயம்புத்தூர்**

கிராமப்புறத்தைச் சேர்ந்த குடிமைப்பணி ஆர்வல மாணவர்களின் நலனுக்காக மதுரை மற்றும்

கோயம்புத்தூரில் முதனிலை தேர்வு பயிற்சிக்காக இரண்டு கூடுதல் பயிற்சி மையங்களை அரசு நிறுவியுள்ளது. இந்த பயிற்சி மையங்களுக்கு "அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையம்" என பெயரிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு மையங்களும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் செயல்படுகின்றன.

## VI. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம்

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில், பணியாளர் தேர்வு ஆணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற ஆளெடுப்பு முகமைகள் நடத்தும் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை பொருளாதார ரீதியாக நலிவுற்ற மாணவர்கள் திறமையாக எதிர்கொள்ளும் பொருட்டு,

பயிற்சி மையம் ஒன்று சென்னையில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், பயிற்சி மையத்தை அமைக்கும் பொருட்டு அரசு ரூ.153.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட போட்டித் தேர்வுகள் பயிற்சி மையத்தினை மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் 04.01.2018 அன்று தொடங்கி வைத்தார். தற்போது, இப்பயிற்சி மையமானது சென்னை, பழைய வண்ணாரப் பேட்டையில் அமைந்துள்ள சர். தியாகராய கல்லூரி வளாகத்தில் வாடகை அடிப்படையில் செயல்பட்டு வருகிறது.



பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், தமிழக அரசின் இட ஒதுக்கீட்டு விதிமுறைகளைப் பின்பற்றி இப்பயிற்சி வகுப்புகளுக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகின்றது. பயிற்சி வகுப்புகள் மூன்று மாதங்களுக்கு 500 மாணவர்கள் என ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டுவருகின்றன. இம்மாணவர்களுக்கு தலா ரூ.1000/- மதிப்புள்ள போட்டித் தேர்வுகளுக்கான கல்விக் கையேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## VII. அண்ணா மேலாண்மை நிலையம்

தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம், 1975-ன்கீழ் அண்ணா மேலாண்மை நிலையமானது 1981-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அகில இந்திய குடிமைப் பணி அலுவலர்கள் முதல் அமைச்சுப் பணியாளர்கள் வரை அனைத்துத் தரப்பு அரசு அலுவலர்களுக்கும் பயிற்சி தரும் ஒருங்கிணைப்பு பயிற்சி நிறுவனமாக அண்ணா மேலாண்மை நிலையம் விளங்குவதால், தமிழக அரசின் மாநில நிருவாக பயிற்சி நிறுவனமாக அமையப்பெற்றுள்ளது.



*(தலைமைச் செயலக அலுவலர்களுக்கான பயிற்சியினை மாண்புமிகு அமைச்சர் துவக்கி வைத்தார்)*

2017-2018 ஆம் ஆண்டில் 31.03.2018 வரை அண்ணா மேலாண்மை நிலையம் 440 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி சுமார் 15,300 அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது (மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்களில் நடைபெற்ற பயிற்சிகளையும் உள்ளடக்கியது).

அண்ணா மேலாண்மை நிலையம் நல் ஆளுமை, பாலின விழிப்புணர்வு, பேரிடர் மேலாண்மை, அரசு நிறுவனங்களில் முழுமையான

தர மேலாண்மை, மின் ஆளுமை, வழக்கு மேலாண்மை, குடிமக்களை மையப்படுத்திய நிர்வாகம், நகர வடிவமைப்பு மற்றும் மேலாண்மை போன்ற பொது மேலாண்மை சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், மனித உரிமைகள் சட்டம், ஒப்பந்த நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த விதிகள், சரக்கு மற்றும் சேவைகள் வரி போன்ற பலதரப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்த பயிற்சிகளும் இந்நிலையத்தில் அளிக்கப்படுகின்றன.

மேற்கண்ட பயிற்சிகளுடன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவை கழகம், தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழ் நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம், வணிக வரித் துறை, தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், போன்ற பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையம்

தன்னாட்சியுடனும், தற்சார்புடனும் விளங்குவதால், நிலையத்தின் தலைமை அமைப்பாக உள்ள ஆட்சிமன்றக் குழு கொள்கை அளவிலான முடிவுகளை எடுக்கிறது. மாண்புமிகு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆட்சிமன்றக் குழு செயல்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டில் நிலையத்தில் நடத்தப்பட்ட சிறப்பு பயிற்சிகள்

- ❖ மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், சட்ட மன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் 10 பல்வேறுபட்ட பொருண்மைகளில் 26 அணிகளில் தனித்தன்மை வாய்ந்த பயிற்சியினை தலைமைச் செயலகத் துறைகளில் உள்ள 600 அலுவலர்களுக்கு அளிப்பதற்காக ரூ. 25.08 இலட்சத்தினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் 15 அணிகளுக்கு இப்பயிற்சிகளை இந்நிலையம்வழங்கியுள்ளது.

- இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் ஆதரவுடன் "திட்ட மேலாண்மையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் வெற்றி வரலாறு" என்ற தலைப்பில் ஒருவார கால புத்தாக்கப் பயிற்சி பல்வேறு மாநிலங்களிலுள்ள 22 மூத்த இந்திய வனப் பணி அலுவலர்களுக்கு நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்டது.

- அண்ணா மேலாண்மை நிலையமானது "நகர விருட்சத் தகவல் அமைப்பு" என்ற பெயரிலான (UTIS) "மையப்படுத்தப்பட்ட மின் ஆளுமை மென்பொருள் செயல்பாடு" என்ற புதிய தலைப்பில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்களுக்காக 21 அணிகளில் பயிற்சி நடத்தியுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் ஆகியோருக்கு "MS-Word மற்றும் MS-Excel" என்ற தலைப்பில் பிரத்தியேக கணினி பயிற்சி ஐந்து அணிகளில் வழங்கப்பட்டது.

- இந்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் ஆதரவில் "இணையதளத்தில் விரிவான மாற்றியமைக்கப்பட்ட பொருண்மையில் முனைப்புப் பயிற்சி" (COMMIT) என்ற இணையதள நிகழ்நிலை பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியானது 8 மணி நேரம் நேருக்கு நேர் பயிற்சி மற்றும் 20 மணி நேரம் இணையதள நிகழ்நிலை பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

- தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் சுழற்சி முறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு நிர்வாகம், பராமரிப்பு, அவர்தம் கட்டுப்பாட்டிலுள்ள நவீன அரிசி ஆலைகள் மற்றும் உபகரணங்களின் பாதுகாப்பு ஆகிய முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய சிறப்பு பயிற்சியானது அத்துறையின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு 27.11.2017 முதல் 29.11.2017 வரை நடத்தப்பட்டது.

- மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை கேட்டுக்கொண்டதன்படி மத்திய தலைமைச் செயலக பிரிவு அலுவலர்கள் / சார்பு செயலாளர்களுக்கு 10 வார கால

மாநில பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

- தலைமைச் செயலக சார்புச் செயலர்கள் / துணைச் செயலர்கள் / இணைச் செயலர்கள் ஆகியோருக்கு "மின் ஆளுமை மற்றும் இணைய பாதுகாப்பு பிரச்சினைகள்" என்ற தலைப்பிலும், உதவி பிரிவு அலுவலர்கள், பிரிவு அலுவலர்கள் மற்றும் சார்புச் செயலர்கள் ஆகியோருக்கு "MS-Excel மேம்படுத்தப்பட்ட பயன்பாடுகள்" என்ற தலைப்பிலும், பிரிவு அலுவலர்கள், சார்புச் செயலர்கள் மற்றும் துணைச் செயலர்கள் ஆகியோருக்கு "தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பப் (ICT) பயன்பாடுகள்" என்ற தலைப்பிலும் சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**மண்டல மையங்களில் பயிற்சி திட்டங்கள்:-**

மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மண்டல மையங்கள் ஏற்படுத்தப்பட்டதில் இருந்து பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்ட

ஆட்சியர் அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் ஒரு பயிற்சி என்ற அளவில் தொடர்ந்து பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2017-2018 ஆம் ஆண்டில் 124 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன்மூலம் ஏறத்தாழ 5800 அலுவலர்களுக்கு இம்மூன்று மண்டல மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 8. முடிவுரை

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை மாநில அரசின் மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுகிறது. அவ்வகையில், பயிற்சி அளிக்கப்பட்ட திறன் மிகுந்த அரசுப் பணியாளர்களை அன்றாட அரசுப் பணிகளின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்குகிறது.

**D. ஜெயக்குமார்,**
**மீன்வளம், பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.**